IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **100/2013** |
| | | D/W's | : | **DW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | M. கோபாலகண்ணன் | CASTE | : | |
| S/O | மாயக்கிருஷ்ணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | குலசேகரன்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **58** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.08.2025**

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் 04.04.2025 அன்று அன்றைய கிராம நிர்வாக அலுவலரான முத்துக்கருப்பன் என்பவரை பி.வா.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் அவர் மாறுதலாகி சென்றுவிட்டதால் அந்த முதல் விசாரணை வாக்குமூலம் நீக்கப்பட்டு தற்போதுள்ள கிராம நிர்வாக அலுவலரை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

1. நான் குலசேகரன் கோட்டை கிராமம் கிராம நிர்வாக அலுவலராக தற்போது பணியாற்றி வருகிறேன். 3,4,5 பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளேன்.

2. நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு குலசேகரன்கோட்டை கிராமம் நத்தம் புல எண்.580/26 பழைய புல எண்.391/6 பாகம், நத்தம் பரப்பு 0.00.23 ஏர்ஸ் இடமானது சந்து என கிராம கணக்கில் தாக்கல் ஆகி உள்ளது. மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் கணினி பிரதி சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வழக்கு சொத்தான சர்வே எண்.580/26 கிராம கணக்கில் சந்து என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சர்வே எண். 580/26 ன் அளவுகள் கிழமேல் தென்புறம் 16.5 மீட்டர் வடபுரம் 16.6 மீட்டர் மற்றும் வடதென்புரம் மேல்புறம் 1.7 மீட்டர் கிழக்கில் 1.2 மீட்டர். மேற்படி

சர்வே எண் உள்ள இடத்தின் வடபுறம் சர்வே எண். 580/25, 580/24 ஆகிய இடங்கள் உள்ளது. சர்வே எண். 580/26 ன் தென்புறம் சர்வே எண். 580/27 உள்ளது.

2. வழக்குச்சொத்தான சந்து கிழமேல்புரம் கிழக்குப்பக்கம் அகலமாகவும், மேற்குப்பக்கம் குறுகலாகவும் உள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் தற்போது கார்த்தி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு கட்டியுள்ளார். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் ஆக்கிரமிப்பு இல்லை என்றாலும், வழக்கில் நிலுவையில் இருந்தபோதுதான் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால் அரசு தரப்பை வழக்கில் சேர்த்துள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தற்போது தான் எனக்குத்தெரியும்.

3. வாதிதரப்பில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ஆக்கிரமிப்பை அகற்றச்சொல்லி மனு செய்துள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. வழக்கின் 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்தின் வடபுரத்தில் உள்ள சர்வே எண் 580/25ல் அனுபவத்தில் உள்ளார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்குச்சொத்தான சந்தின் பழைய சர்வே எண் 391/6. தற்போதுள்ள புதிய சர்வே எண்களான 580/24, 580/25க்கும் பழைய சர்வே எண் 391/6. சர்வே எண் 580/24, 580/25, 580/26 ஆகியவற்றின் நிலவகைப்பாடு தற்போது ஆவணங்கள் படி நத்தம் என்று உள்ளது. நத்தம் யூடிஆர் க்கு முன்புள்ள மேற்படி நிலங்களின் வகைப்பாடு பற்றி என்னிடம் ஆவணம் கைவசம் இல்லை.

2. யூடிஆர் க்கு முன்புள்ள ஆவணங்கள் எடுத்து வந்து நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்க இயலுமால் என்றால் அந்த ஆவணங்கள் மாவட்ட ஆவணங்கள் காப்பகத்தில் உள்ளன ( **மேற்படி யூடிஆர் க்கு முன்புள்ள ஆவணங்கள் பற்றிய கேள்விக்கும், யூடிஆர் க்கு முன்புள்ள சங்கதிகள் பற்றியும் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் எந்த மறுப்பும் தெரிவிக்கப்படாத நிலையில் மேற்படி கேள்விகளை கேட்க இயலாது என்று வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை பற்றி வினவியபோது 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்குச்சொத்தான சந்து 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான சடையாண்டிக்கும், வீரப்பன் என்பவருக்கும் தனித்து பாத்தியப்பட்ட இடமாக இருந்தது என்றும் யூடிஆர் க்கு பின்பாக வழக்குச்சொத்தான சந்து தவறுதலாக கிராம நத்தம் சந்து என்று தவறாக வகைப்பாடு படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி கேள்வி**

**அவசியமானது என்று வாதிடப்பட்டது. மேலும் எதிர் வழக்குரையில் 4 வது பத்தியில் இது சம்பந்தமாக சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எதிருரையில் கேட்கப்பட்ட கேள்வி சம்பந்தமாக சங்கதிகள் உள்ளதால் மேற்படி கேள்வி அனுமதிக்கப்பட்டது.)**

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி